வருகின்றோம். இதிலே டாமின் நிறுவனமும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கல்லை வெட்டியெடுப்பதை தேசிய மயமாக்க வேண்டுமா என்பதைப் பற்றி கொள்கை அளவில் அரசு முடிவெடுக்க வேண்டும்.

கரூர், தாராபுரம் போன்ற பகுதிகளில் மாணிக்கக் கற்கள்

462—(*வினா எண். 10238) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர், தாராபுரம் போன்ற பகுதிகளில் மாணிக்கக் கற்கள் போன்ற விலை உயர்ந்த கற்கள் ஏராளமாக கிடைப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) தனியார் நிறுவனங்கள் இந்த கற்களை சேகரித்து விற்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கரூர், காங்கேயம் திருச்சி போன்ற இடங்களில் சில தனியார் இந்தக் கற்களை வாங்கி சிறிய அளவில் அமைத்துள்ள மெருகேற்றும் தொழிலகத்தில் துண்டுகளாக்கி பட்டைத் தீட்டி மெருகேற்றி பம்பாய், அகமதாபாத், ஜெய்ப்பூர் போன்ற இடங்களில் கடைசியாக விற்கின்றனர். மேலும் பம்பாய், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களிலிருந்தும் வியாபாரிகள் இக்கற்களை வாங்கி துண்டாக்கி மெருகேற்றி கடைசியாக அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாணிக்கக் கற்கள் போன்ற விலை உயர்ந்த கற்களைப் பட்டைத் திட்டும் தொழிற்சாலையை தனியாருக்குத் தருவதைவிட, அதை அரசே ஏற்று நடத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதிகமாக விலை உயர்ந்த கற்கள் தமிழகத்தில் கிடைக்கவில்லை. பெயர்தான் மாணிக்கக் கல். ஆனால், அதற்கான விலை கிடைப்பதில்லை. இங்கே பலவிதமான கற்கள் கிடைக்கின்றன. விலை உயர்ந்த கற்கள் தமிழகத்தில் இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே வேறு எங்கேயாவது இது போன்ற விலை உயர்ந்த கற்கள் கிடைப்பதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ரூபி, சபையர், கார்னட், அக்குமெரின், அமிதெஸ்ட், மரகதக் கற்கள் போன்றவைகள் ஓரளவுக்குக் கிடைத்து வருகின்றன. ஆனால் விலை உயர்ந்ததாக இல்லை என்று சொல்லுகிறார்கள். மாணிக்கக் கற்கள் கிடைப்பதாகத் தகவல் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலேகூட சில கற்கள் கிடைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் சிதறிய கூளங்களாக இருக்கிறதே ஒழிய, எடுத்தால் இலாபகரமாக இருக்குமா என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரூர் வட்டத்தில் சின்ன தாராபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகே ஒரு மிகப் பெரிய காடு, பெப்பிலி மேடு என்று அழைக்கப்படும் அந்த இடத்தில் இது போன்ற கற்கள் கிடைக்கிறது. அந்த இடத்தை ஆய்வு செய்தால் மிகப் பெரிய அளவுக்கு விலை உயர்ந்த கற்கள் கிடைக்குமென்று தெரிகிறது. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சின்ன தாராபுரம், காங்கேயம் (பெரியார் மாவட்டத்திலும்), மணவாடி, கரூர், ஐயர்மலை (திருச்சி மாவட்டத்திலும்), ஆகிய இடங்களில் மாணிக்கக் கற்களில் மணிக் கற்கள் என்று கிடைக்கின்றன. அதுவும் சிதறிய நிலையில் தான் இருக்கிறது. பெரிய அளவில் செயல்படுவதற்கான நிலைமைகள் இல்லை. அந்தப் பகுதிகளிலே சிலர் வசதியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். பலத்த மழை பெய்யும் காலத்தில், அந்தக் கற்கள் மேலே தெரிகிறது. நிலத்தின் சொந்தக்காரர்கள் அவைகளை எடுத்து, விற்று காசாக்கிக் கொண்டிருக்கிறார்கள் அது பெரிய அளவுக்கு உள்ள சுரங்கத் தொழிலாக எண்ணும் அளவுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விலை உயர்ந்த கற்களான வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம் இப்படிப்பட்ட கற்கள் எப்படி இருக்கின்றன என்று தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த விலை உயர்ந்த கற்கள் எல்லாம் பார்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சென்னையிலேயே பெரிய காட்சி சாலை இருக்கிறது. பேந்தியன் சாலையில் இருக்கிறது. அங்கே

எல்லா வகையான கற்களும் வைத்திருக்கிறார்கள். மாலை நேரங்களில், ஓய்வான நேரங்களில் அங்கே போனால் எல்லா வற்றையும் பார்க்கலாம். பெரிய தொல்பொருள காட்சிசாலை இருக்கிறது.

திண்டுக்கல் நகரில் குடிதண்ணீர் வழங்கல்

463— (*வினா எண். 11184) திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் குடிதண்ணீர் தினசரி கிடைப் பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) காமராசர் அணையில் உள்ள தண்ணீர் மூலம் எவ் வளவு நாளைக்கு கொடுக்க முடியும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் நகரில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வைகை நதியில் பேரணை நீரை ஆதார மாகக் கொண்டு ரூ. 897.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் திண்டுக்கல் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்ட செயலாக்கப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. திட்டம் முழுமையாக ஜனவரி 1988-ல் முடிவடைந்து பயனுக்குக் கொண்டுவர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது. இத்திட்டம் பயனுக்கு கொண்டு வரப்பெற்றவுடன், திண்டுக்கல் நகருக்கு, நபரொன்றுக்கு 70 லிட்டர் வீதம் தினசரி குடிநீர் கிடைக்கும்.

(ஆ) காமராசர் அணையிலுள்ள தண்ணீரை நகருக்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்வதாக வைத்துக்கொண் டால் தற்போதுள்ள நீரின் அளவு 1987 மார்ச் வரை போது மானது. தற்போது நான்கு நாட்களுக்கு ஒருமுறை 45.5 இலட்சம் லிட்டர் (10 இலட்சம் காலன்) வீதம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் என்றாலே நமக்கு நினை விற்கு வருவதே தண்ணீர் தட்டுப்பாடுதான். தற்போது அது மாவட்டத் தலைநகராக ஆன பிறகு அங்கே மக்கள் தொகை அதிகமாகிவிட்டது. அதன் காரணமாகவும் தண்ணீர்த் தட்டுப் பாடு மிக அதிகமாக இருக்கிறது. இப்போதுள்ள முறைப்படி எத்தனை நாளைக்கு ஒருமுறை திண்டுக்கல் நகருக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.